கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் பிப்ரவரி மாதம் 03ம் தேதி திங்கட்கிழமை
இடைநிலை மனு எண்.02/2024
இன்
அசல் வழக்கு எண்.291/2018
* * * *

திருப்பரங்குன்றம் ஜன்னத்துல் பிர்தௌஸ்
முஸ்லீம் பொது ஜமாத் மற்றும் அறக்கட்டளை
(அதன் செயலாளர் & மேனேஜிங் டிரஸ்டி
S.கமர்தீன் அவர்கள் மூலம்) ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சையத் சுல்தான் பாட்ஷா
2. நாகூர் கனி
3. இப்ராகிம்ஷா
4. முத்துமுஹம்மது
5. நாகூர் மீரான் ... எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இம்மனுவானது இன்று 23.01.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் திரு.R.கணேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும்,

இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கு பிராதில் சீர்திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் கட்டளை 6 விதி 17ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியின் தகப்பனாரால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்/வாதியின் தகப்பனார் சார்பாக நடத்தி வந்த அறக்கட்டளையின் சார்பாக எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது மனுதாரர்/வாதியின் தந்தை இறந்துவிட்ட நிலையில், அவரது மகனான மனுதாரர்/வாதியினை பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்படி மனுதாரர்/வாதியின்

அறக்கட்டளைக்கு புதிய மேனேஜிங் டிரஸ்டி மற்றும் செயலாளராக நியமித்துள்ளனர் என்றும், அதன் அடிப்படையில் மனுதாரர்/வாதியானவர் கடந்த 03.03.2024ம் தேதி மேற்படி அறக்கட்டளைக்கு மேனேஜிங் டிரஸ்டி மற்றும் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டதாகவும், எனவே மேற்படி மேற்படி வழக்கில் நிவாரணம் பெறவேண்டியுள்ளதால் மனுதாரர்/வாதியானவர் அசல் வழக்கில் அவசிய தரப்பினர் என்பதால் மனுதாரர்/வாதியை அசல் வழக்கில் சேர்த்து பிராதினை திருத்தம் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

1.2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் மனுதாரர்/வாதி தூய்மையான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கத்திலேயே இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் கூறுவது போன்று மேற்படி அறக்கட்டளையில் எவ்வித தேர்தல் நடைப்பெறவில்லை என்றும், அதற்கான ஆவணங்களும் இல்லை என்றும், இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் அது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்தும் என்றும், மேற்படி இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**<u>2) தீர்வு:–</u>**

இருதரப்பிலும் மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

2.1) இருதரப்பு வாதத்திற்கும் போதிய வாய்ப்பளித்தும் இருதரப்பிலும் வாதுரைக்கவில்லை. எனவே, வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவானது அசல் வழக்கின் பிராதில் சீர்திருத்தம் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) இம்மனுவில் மனுதாரர் தான் வாதியின் அறக்கட்டளையின் தற்போதைய செயலாளர் மற்றும் டிரஸ்டி என்றும், எனவே, வாதி அறக்கட்டளை சார்பாக மனுதாரர் வழக்கை மேல் நடத்தும்விதமாக அசல் வழக்கின் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பின் வாதி அறக்கட்டளையின் மேனேஜிங் டிரஸ்டி எஸ்.கமர்தீன் என்ற பெயரை சேர்க்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2.3) இந்நிலையில், வாதி அறக்கட்டளையின் தற்போதைய செயலாளர் மற்றும் மேனேஜிங் டிர்ஸ்டி மனுதாரர் எஸ்.கமர்தீன் என்பவர்

தான் என்பதை நிரூபணம் செய்யும்விதமாக மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியமோ ஆவணமோ முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், கடந்த 22.11.2023ல் வாதி அறக்கட்டளை பொதுகுழு உறுப்பினர் அனைவரும் புதிய மேனேஜிங் டிர்ஸ்டி மற்றும் செயலாளராக மனுதாரரை நியமனம் செய்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளபோதும் மேற்படி புதிய மேனேஜிங் டிர்ஸ்டி மற்றும் செயலாளரை வாதி அறக்கட்டளைக்கு நியமனம் செய்ய தீர்மானம் எதுவும் ஏற்படுத்தப்பட்டதா என்ற விவரம் எதுவும் மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிடவில்லை.

இந்நிலையில், வாதி அறக்கட்டளைக்கு மனுதாரர் எஸ்.கமர்தீன் தான் புதிய மேனேஜிங் டிர்ஸ்டி மற்றும் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று நிரூபணம் செய்யாத நிலையில், மனுதாரர் மனுவில் கூறியுள்ளதுபோல் அசல் பிராதில் சட்டப்படி சீர்திருத்தம் செய்ய இயலாது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 03.02.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஓம்.E.மணிகண்டன்),
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு**:–
**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

(ஓம்.E.மணிகண்டன்),
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.02/2024
அசல் வழக்கு எண்.291/2018
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 03.02.2025